# தந்தையின் தடங்கள்

அமரர்

மாணிக்கம் திருநாவுக்கரசு

அவர்களின்

நினைவு வெளியீடு

11.06.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**எமது அன்புத் தெய்வத்தின்**
**திருப்பாதங்களுக்கு**
**இந்நூல் சமர்ப்பணம்**

அன்புருவாய் ஆனந்த சொரூபியாய்
பண்பின் சிகரமாய் யாவர்க்கும் இனியவனாய்
அன்புமொழி பேசி அறிவுரைகள் கூறி
ஆதரவு தந்து வழிகாட்டியாகி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
மீளாத் துயரில் எம்மைத் தவிக்க விட்டு
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தெய்வம்
**அமரர் திருநாவுக்கரசர்**
அவர்களின்
பாதக் கமலங்களில் இம்மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர். மாணிக்கம் திருநாவுக்கரசு

மலர்வு
24.10.1947

உதிர்வு
12.05.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்வி வளம், கலைவளம் மிக்க வடமராட்சிப் பிரதேசத்தின் வல்வெட்டி எனும் கிராமத்தில் 1947ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24ம் திகதி மாணிக்கம் - அன்னம் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர்தான் திருநாவுக்கரசு. குடும்பத்தில் ஆறு ஆண் சகோதரர்களுக்குள் நான்காவதாகப் பிறந்த இவர் சிறுவயதிலிருந்தே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்.

தனது ஆரம்பக்கல்வியை கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தொடங்கிய திருநாவுக்கரசு அவர்கள் தனது நாவன்மையினாலும் புத்திக்கூர்மையினாலும் எல்லோரது கவனத்தினையும் தன்பால் திருப்பியிருந்தார் என்றால் அது மிகையாகாது. பாடசாலையில் அவர் காட்டிவந்த திறமையின் காரணமாக அவர் நான்காம் தரம் படிக்கும் போது நான்காம் தரத்திலிருந்து ஐந்தாம் தரம் கல்வி பயிலாது ஆறாம் தரத்திற்கு அவரை இரட்டை வகுப்பேற்றம் (Double Promotion) செய்திருந்தமை இன்றும் பலரால் விதந்துரைக்கப்படுகின்றது.

இவ்வாறாக பாடசாலைக்கல்வியில் திறமை மிக்கவராகத் திகழ்ந்த திருநாவுக்கரசு விளையாட்டுத் துறையிலும் விற்பன்னராகவே விளங்கினார். கல்வியில் அதிக ஈடுபாடுள்ளவர்கள் விளையாட்டில் சாதிப்பது மிக அரிது, ஆனால் இவரோ விதிவிலக்கானவராக மிளிர்ந்தார். பாடசாலை மட்ட போட்டிகள் மட்டுமல்லாமல் கொத்தணி கோட்ட மட்டப் போட்டிகளிலும் தடகள விளையாட்டுகளில் தனது பெயரைப் பொறித்திருந்தார் என்பதை அவரது சமகாலத்தவர்கள் மறுக்க மாட்டார்கள்.

திருநாவுக்கரசு என்பவர் உண்மையில் நாவுக்கு அரசராகவே வாழ்ந்திருந்தார். அவரது பேச்சாற்றல், வாதிடும் திறன் மற்றவர்களை கவர்ந்திழுக்கும் வசீகரமான உரையாடல் அவர்பால் நண்பர்களையும் அன்பர்களையும் அதிகமாக சேர்த்திருந்தது. உறவினர்களால் நாமம் என்றும் நண்பர்களால் நாவச்சி, நாமண்ணா என்றும் செல்லமாக அழைக்கப்பட்ட திரு அவர்கள் தனது குடும்ப பொருளாதார நிலை காரணமாக தகுதியிருந்தும் தனது உயர் கல்வியை துறந்து தொழில் முயற்சியில் இறங்கினார்.

ஓடிக்கொண்டிருக்கும் ஆறு ஓரிடத்தில் தேங்கும் என்பதுபோல திறமையுள்ளவன் தனக்கான நிலை எட்டும் வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்திருக்கமாட்டான். அதுபோலவே திரு அவர்களும் பல தொழில்களை பரீட்சித்துப்பார்த்து அற்றில் திருப்தியுறவில்லை. இளமை வேகம், நண்பர்களது ஆதரவு திருவை பல முயற்சிகளில் ஈடுபட வைத்தது. எத்தொழில் செய்தபோதும் எதிலும் நிலைக்காத திரு எப்படியோ தனது குடும்பத்திற்கு வேண்டிய வருமானத்தினை ஈட்டத்தவறவில்லை என்பதால் அவரை எவராலும் வெறுக்கமுடியவில்லை.

இக்காலப்பகுதியில் தான் நாட்டில் சேகுவரா இயக்கத்தின் எழுச்சி ஆரம்பமாகிறது. முற்றிலும் இடது சாரிப்போக்குடைய திரு அவர்களும் விதி விலக்கில்லாமல் அவ் இயக்கத்தின் கொள்கையின்பால் ஈர்க்கப்படுகிறார். சில நண்பர்களுடன் இணைந்து சேகுவரா இயக்கத்தின் ஆதரவாளனாக தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறார். ஆனாலும் என்ன செய்வது அரச இயந்திரத்தின் அச்சுறுத்தல் காரணமாக சிலகாலம் திருவும் மறைந்து வாழவேண்டிய ஓர் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இவ்வாறு அவ் இயக்கத்தின் செயற்பாடுகள் முடங்கிப்போனபோது இவரும் தனது வழியை மாற்றிக்கொண்டு முற்றுமுழுதாக தொழிலை நோக்கி தனது பார்வையைச் செலுத்தி அதன்பால் கொழும்பு சென்றார். 1970ம் ஆண்டு காலப்பகுதியில் திரு அவர்கள் கொழும்பில் வாழ்ந்த காலப்பகுதியில் திரைப்படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். “ஏழுவீரர்கள்” எனும் அப்படத்தின் படப்பிடிப்பு முடிவுறும் தறுவாயில் அதன் தயாரிப்பாளர் இறந்துபோனமையினால் அத்திரைப்படம் வெளிவராது போய்விட்டது. அச்சம்பவம் திருவின் மனநிலையினை பெரிதும் பாதித்திருந்தது. அதுபற்றி அவர் அலட்டிக்கொள்ளாமலே இருந்துவிட்டார்.

இவ்வாறு பல பரிமாணங்கள் கொண்ட திருவுக்கு திருமணகாலம் வந்துவிட்டதை உணர்ந்த அவரது உறவுகள் இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த குமாரன் - சின்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட மகளான ஜானகி என்பவரை திருவுக்கு தகுந்த துணையாவார் என்று தீர்மானித்து திருமணத்துக்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். 1972ம் ஆண்டு திருநாவுக்கரசு-ஜானகி இருவருக்கும் ஊரே மெச்சும் வண்ணம் திருமணமானது இனிதே நடைபெற்றது. அத்திருமணத்தின் பயனாக தம்பதியர் இருவருக்கும் காலவோட்டத்தில் இரண்டு ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தனர்.

1987ம் ஆண்டு காலப்பகுதியில் திரு அவர்கள் உடுப்பிட்டி பலநோக்குக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கத்தில் ஓர் ஊழியராக இணைந்து கொண்டார். ஆரம்பத்தில் வியாபார உதவியாளராக இணைந்தவர் தனது திறமையினால் படிப்படியாக முகாமையாளர் எனும் நிலைக்கு உயர்த்தப்பட்டார். திரு அவர்களின் நேர்மை, கடின உழைப்பு என்பவற்றை அவதானித்த கூட்டுறவுச்சங்க நிர்வாகம் பருத்தித்துறை இறங்கு துறையில் தாம் ஒப்பந்தத்துக்கு எடுத்த கப்பற் பொருட்கள் இறக்கும் பணிக்கு தலைமை மேற்பார்வையாளராக திரு அவர்களை நியமித்திருந்தமை அவர் வாழ்வில் ஓர் மைல்கல் எனலாம். 1990 காலப்பகுதியில் இருந்து 1993 வரைக்கும் திரு அவர்கள் அப்பணியினை மிகவும் கண்ணியமாக மேற்கொண்டிருந்தார் என்றே சொல்ல வேண்டும்.

இறங்குதுறைக்குப் பொறுப்பாக இருந்த காலத்தில் அவரது கடமையுணர்வு, தலைமைப்பண்பு என்பவற்றைப் பார்த்து 'எரிக்' எனப்படும் அமெரிக்க கப்பல் கப்டன் திருவுக்கு நினைவுப்பரிசு வழங்கிச்சென்றமை அவருக்கு கிடைத்த ஓர் கௌரவமாகும். மேலும் அக்காலப்பகுதியில் இறங்கு துறையில் மூட்டை தூக்கும் கூலியாட்களுடன் திரு காட்டிய காருண்யம், அவர்களை அன்பாக நடாத்திய விதம் இன்றுவரை அவர்களால் மறக்கப்படவில்லை என்பது திருவின் இறுதிக்காலப்பகுதியில் தெளிவாகியது. அதாவது அவரது மரணத்திற்கு முன் மூன்று மாதங்கள் மந்திகை வைத்தியசாலையில் அவர் தங்கி வைத்தியம் செய்தபோது பருத்தித்துறை இறங்கு துறையில் 1990 காலப்பகுதியில் வேலைபுரிந்த ஒருவரும் வைத்தியம் செய்திருந்தார். அவர் மூலம் தகவல் அறிந்த பல வேலையாட்கள் தினமும் திருவை வந்து பார்த்து நலம் விசாரித்து சென்றமை மறக்கமுடியாத ஓர் அனுபவம் என்று திரு நெருங்கியவர்களிடம் மனம் நெகிழ கூறியிருந்தார்.

1990 காலப்பகுதி அவருக்கு ஓர் திருப்புமுனையான காலம் எனின் அக்காலம் தான் நோய் எனும் காலனும் திருவைக்குறிவைத்த காலமாகும். ஆம் அவரது மரணத்திற்கு ஏதுவாக இருந்த நீரிழிவு எனும் நோய் அக்காலப்பகுதியில் தான் அவரை ஆட்கொள்ளத் தொடங்கியது எனலாம். ஆனாலும் தனது கட்டுப்பாடான உணவுப்பழக்க வழக்கங்களால் அந்நோயினைப் பொருட்படுத்தாமல் இறுதிவரை வாழ்ந்தார் திரு என்பது தான் ஆச்சரியம்.

திரு அவர்கள் 1994ம் ஆண்டு தான் பிறந்து வளர்ந்த ஊரில் உள்ள கூட்டுறவுச்சங்க கிளைக்கு முகாமையாளராக நியமனம் பெற்று பல கிளைகளுக்கு மாற்றம் பெற்று இறுதியாக 2002ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுத்துறையில் இருந்து ஓய்வு பெற்றார்.

திரு அவர்களின் குடும்ப வாழ்க்கை பற்றி நோக்கும் போது உண்மையில் திரு திருவள்ளுவர் எனின் ஜானகி அவர்கள் வாசுகி தான். இது மிகை என்று கூறுபவர் திருநாவுக்கரசு – ஜானகி வாழ்வை நன்கு அறியாதவர் என்றே சொல்லவேண்டும். ஆம் திருவும் அவர் மனைவியும் அவ்வாறு கருத்தொருமித்து வாழ்ந்தவர்கள். இவர்கள் இருவரும் செல்லும் சபையில் எல்லோர் கண்களும் இவர்கள் மேல்தான் இருக்கும்.

திருநாவுக்கரசு – ஜானகி இருவரதும் இல்வாழ்வின் பயனாக நான்கு பிள்ளைகள் பிறந்தனர். அதில் ஒருவரையேனும் வாழ்வில் வீணாகிப்போக விடவில்லை என்பது தான் திருவின் பெருமை. 'வறுமை மாறும் வறுமையில் பட்ட வடு மாறாது' என்பதுதான் அவரது தாரக மந்திரம். அதற்கிணங்க தன்னால் முடியுமானவரைக்கும் பிள்ளைகள் நால்வரையும் கல்வியில் சிறப்புற வைத்தார். வாழ்வில் அவர்கள் நல்ல நிலைக்கு வர வேண்டும் என்பதே தனது கனவு இலட்சியம் என்று வாழ்ந்தார்.

**"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்"**

எனும் குறளுக்கு இலக்கணமாக திரு தனது அத்தனை பிள்ளைகளையும் பார் போற்றும்படி வளர்த்துவிட்டு சென்றிருந்தார்.

திருவின் குடும்ப வறுமை காரணமாக அவரது ஆண்பிள்ளைகளில் எவரையாவது வெளிநாடு ஒன்றுக்கு அனுப்புமாறு நண்பர்கள், உறவினர்கள் எத்தனை தடவைகள் வற்புறுத்தியும் கேட்காத திரு கல்வி ஒன்றுதான் அவர்களை எதிர்காலத்தில் மேம்படுத்தும். வறுமை மாறும் என்று பதிலடி கொடுத்து இறுதிவரை அதனை நிரூபித்தும் இருந்தார். ஆனால் திரு அதற்காக பட்ட துன்பங்கள், அவமானங்கள், ஏமாற்றங்கள் என்பது எண்ணிலடங்கா. அவை எதையும் பொருட்படுத்தாது பிள்ளைகளது முன்னேற்றத்தினை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர். அவர் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார் என்றால் அது பொய்யில்லை.

மனைவி பிள்ளைகளில் கவனம் செலுத்தி வந்த திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது உடல் நலத்தில் அக்கறை கொள்ளாமல் இருந்தது ஏனோ துரதிஷ்டம்தான். 23 வருடங்களுக்கு மேலாக நீரிழிவு நோயுடன் வாழ்ந்து மருத்துவர்களுக்கே ஆச்சரியமாக விளங்கிய அவர் இறுதிக்காலப்பகுதியில் இனிப்பு சுவையினை உணவில் அதிகம் எடுத்துக்கொண்டு விட்டார். வாழ்வில் பல கசப்புகளை எதிர்கொண்ட அவர் இறுதியாக இனிப்பை நாடியது ஒன்றும் தவறல்லத்தான். என்றாலும் உடலை உருக்கி உயிரை மாய்க்கும் அச்சுவையினை அவர் தவிர்த்திருக்கலாம். தவிர்த்திருந்தால் நாம் ஓர் உன்னதனை இழக்காமல் இருந்திருப்போம் என்பதுதான் எல்லோரதும் ஆதங்கம்.

"மண்ணில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" எனும் அமுத வாக்குக்கு இலக்கணமாக வாழ்ந்த திரு அடிக்கடி கூறும் ஓர் வார்த்தை "அடிக்கிற காத்தில பறக்கிற குப்பைகளுக்கெல்லாம் விழா எடுக்கும் இக்காலத்தில் கோபுரங்களை யாரும் கவனிப்பதில்லை". அதுபோல் அவர் தனது பெருமையினை தானுணராமலே வாழ்ந்து முடித்து விட்டார். உண்மையில் பொருளீட்டி, பொன்செய்து வாழ்பவன் தான் பெருமைக்குரியவன் என்றால் அதில் திரு அவர்கள் பூரணன் அல்லத்தான். ஆனால் பொருள் அற்றுப்போகும்போது ஒருவனது புகழும் சேர்ந்தே போய்விடும். திருவின் திறமைகள், சாதனைகள்,வாழ்கை முறை சற்று வித்தியாசமானது. அதனைப் பொருள் கொண்டு யாரும் வாங்கிவிட முடியாது.

திரு, நாவச்சி, நாமம் நாமண்ணா எனும் நாமங்களைக்கொண்ட திருநாவுக்கரசு அவர்கள் தனது வாழ்நாளில் சாதித்தவை அதிகம் இல்லை என்ற போதும் அவை சாதாரணமானவை அல்ல என்பதே நிஜம். அத்தகு முன்னோடியாக வாழ்ந்த அம்மனிதர் இன்று எம்மோடு இல்லை. அவரது நினைவுகள் என்றென்றைக்கும் நிலைக்கும். அது அவரது சந்ததிகள் வாயிலாக நிலைக்கட்டும். அவரது நிறைவேறா ஆசைகள் அவர்கள் மூலம் நிறைவு பெறட்டும் என்று நாமும் வாழ்த்துவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமம் எனும் அழியா நாமம்

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு"**

காலஞ்சென்ற அமரர் மாணிக்கம் திருநாவுக்கரசுவை நினைக்கும் போது அவரது கவர்ச்சியான எடுப்பான தோற்றம் எதிரியைக்கூட வசப்படுத்தும் வசீகரமான புன் சிரிப்பும் தான் என் கண்முன்னே வந்து நிற்கும்.

அமரர் உறவுமுறையில் எனது மச்சான். கம்பர்மலை அ.த.க பாடசாலையில் எனது வகுப்பில் கல்வி கற்றவர். இத்தனைக்கும் மேலாக எனது உற்ற நண்பனுமாவார்.

நாமம் படிக்கின்ற காலத்தில் ஒரு சகலகலா வல்லவன் எனக்கூறினால் மிகையாகாது. படிப்பில் முதலாவது மாணவன். உதாரணம்: நான் ஆறாம் ஆண்டில் கல்வி பயிலும் போது நான்காம் ஆண்டிலிருந்து ஐந்தாம் ஆண்டு கல்வி பயிலாது ஆறாம் ஆண்டிற்கு "டபுள் புறமோசனில்" எனது வகுப்புக்கு வந்தவர்.

பாடசாலையில் பெற்றார் தின விழாக்களில் நடைபெறும் நாடகங்களுக்கு இவரை கதை நாயகனாக நடிக்க வைப்பார்கள். அவரின் ஜோடியாக (பெண் வேடத்தில்) நான் நடிப்பேன். பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற நாடகப்போட்டிகளில் பங்குபற்றி பலமுறை முதற்பரிசை வென்றிருக்கின்றோம்.

ஒருமுறை கரவெட்டியூர் அண்ணாசாமி ஆசிரியரின் நெறியாள்கையில் நடித்து மகாத்மா திரையரங்கில் மேடையேறிய ராஜராஜசோழன் நாடகம் பிரமாண்டமான வரவேற்பைப் பெற்றது. அதில் சோழனின் மகள் குந்திதேவியின் காதலன் விமலாதித்தனாகத் தோன்றி அண்ணாசாமி ஆசிரியர் எழுதிய வீரவசனங்களுக்கு உயிர் கொடுத்தவர் திருநாமம். பாடசாலையில் நடைபெறும் மாணவர் கலையரங்கம் நிகழ்ச்சியில் இவருக்கு சினிமாப்பாடல் பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அப்போது அவர்

"ஆடிய ஆட்டமென்ன?
பேசிய வார்த்தையென்ன?
தேடிய செல்வமென்ன?
திரண்டதோர் சுற்றமென்ன?
கூடுவிட்டு ஆவிபோனால் கூடவே வருவதென்ன?
வீடுவரை உறவு! வீதிவரை மனைவி! காடுவரை பிள்ளை
கடைசிவரை யாரோ?"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற T.M.S இன் பாடலை பாடிமுடித்தவுடன் சபையில் ஏகோபித்த கரகோஷம் வானைப்பிளந்தது. ஏங்களுக்கு தமிழ் பாடம் கற்பிக்கும் சுப்பிரமணியம் பண்டிதர் இவரைக்கூப்பிட்டு முதுகில் தட்டிப் பாராட்டினார்.

வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக்கழகம் நடாத்திய இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் பாடசாலைப் போட்டிகளிலும் குறுந்தூர ஓட்ட வீரனாகத் திகழ்ந்தார்.

அயல் கிராமங்களிலுள்ள விளையாட்டுக்கழகங்கள் - யங்கம்பன்ஸ், பாரதி, றேஞ்சஸ், நியூட்டன், வல்வை புளூஸ் என்பன ஆண்டுதோறும் இல்ல விளையாட்டுப்போட்டி நிகழ்த்தும்போது வெளிக்கழகங்களுக்கான அஞ்சலோட்டப்போட்டியும் நடாத்துவார்கள். அவைகளில் நாமமும் நானும், ராஜசிங்கம், அருளப்பு(யப்பான்) ஆகியோர் கொண்ட குழு பங்குகொண்டு வெற்றிகளைப் பெற்றிருக்கின்றோம். ஒருமுறை றேஞ்சஸ் நடாத்திய போட்டியில் மூன்றாவது நபராக ஓடும் சந்தர்ப்பம் எனக்கு வழங்கப்பட்டு குச்சியைப் பெற்றுக்கொண்டு ஓடும் போது கால்கள் இடறி வீழ்ந்து விட்டேன். பின்பு என்னைச் சுதாகரித்துக்கொண்டு எழுந்து ஆறு கழகங்கள் பங்குகொண்ட போட்டியில் கடைசி ஆளாக நான் கொடுத்த குச்சியைப்பெற்று முதல் வீரனாக போட்டியை நிறைவு செய்த பெருமை நாமத்தையே சாரும்.

வல்வெட்டி கருணாநிதி ச.ச.நிலையத்தைச் சேர்ந்த குணசிங்கம் என்பவரின் நெறியாக்கலில் “நீயா மனிதன்?” என்ற நாடகத்தில் காமப்பசி கொண்ட கதையின் நாயகனாக நடித்தார். இந்த நாடகம் றேஞ்சஸ் விளையாட்டுக்கழக நிதிக்காக மேடையேற்றப்பட்டு பெரும் வசூலைப்பெற்றது.

வல்வெட்டி வன்னிச்சிஅம்மன் கோவிலில் நடந்த கார்னிவெலில் மூன்று நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. ஆதில் இரத்தக்கண்ணீர் படத்தில் நடிகவேள் எம்.ஆர்.ராதா நடித்த "குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பது" என்ற பாடலுக்கு தனிநடிப்பு நடித்து ரசிகர்களை பரவசத்திலாழ்த்தியவர்.

இவர் கொழும்பில் வதிரி நண்பர்களுடன் சப்பாத்து வேலை பழகுகின்றபோது இலங்கைத்தயாரிப்பான “குத்துவிளக்கு” படத்தை இயக்கியவர்கள் “ஏழுவீரர்கள்” என்ற சினிமாப்படத்தை எடுப்பதற்காக நேர்முகப்பரீட்சை வைத்து இவரையும் ஒரு வீரனாக நடிப்பதற்கு தேர்ந்தெடுத்தார்கள். பின்பு படம் பாதியில் நின்றுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியில் ஜனனமானோர் என்றோ ஒருநாள் மரணம் அடைவது நிச்சயம். மேலும் அமரர் அவர்களின் நினைவுப்பதிவுகளை மலரில் அவர் பற்றி ஒருசில வார்த்தைகள் எழுதுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்காக அவரது பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் நன்றி கூறுவதோடு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**காசிப்பிள்ளை அருந்தவம்**
**"கலாலயம்"**
**தர்மகுலசிங்கம் ச.ச.நிலையம்**
**வல்வெட்டி.**

**நற்சிந்தனைத் துளிகள் சில...**

- சுதந்திரம் என்பது மனதில் உதயமாகிறது, கயிறுகளைத் துண்டிப்பதால் அல்ல.
- வாழ்க்கை என்பது ஒரு நாடகம். இதன் உட்பொருளைப் புரிந்து கொண்டால் பெரும் மகிழ்ச்சி இருக்கும்.
- உண்மையான வெற்றி என்பது புலன்களின் மீதுள்ள பூரணக் கட்டுப்பாடாகும்.
- நீங்கள் விரும்பியது கிடைக்கவில்லையெனில் அது உங்களுக்குத் தேவையற்றதாக இருக்கக்கூடும்.
- அனுசரித்து நடக்கத் தெரிந்தவனே பிழைக்கத் தெரிந்தவனாகிறான்.
- முதுமை அடைவது பெரிய விடயமல்ல, ஆனால் வீணான விஷயங்களின் பாதிப்பு உங்களை முதுமை ஆக்கிவிடும்.
- தனது கோபத்தை கட்டுப்படுத்த முடியாதவன் பிறரது இயலாமையை எப்படி விமர்சிக்க முடியும்.
- செல்வத்தை இழந்தால் எதனையும் இழக்கவில்லை,
  ஆரோக்கியத்தை இழந்தால் ஏதோ சிறியதை இழந்து விட்டீர்கள்
  ஆனால் குணத்தை இழந்தால் அனைத்தையும் இழந்து விட்டீர்கள்
- புகழ்ச்சியை நான் விரும்புவேனாகில், இகழ்ச்சி என்னை எளிதாகக் காயப்படுத்திவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவோட்டம்

அமரர் மாணிக்கம் திருநாவுக்கரசு அவர்கள் 1964ம் ஆண்டுப்பகுதியில் என்னோடு பழகத்தொடங்கினார். எனது தந்தையார் நாட்டுக்கூத்து கலைஞராகவும் மிருதங்க விற்பன்னராகவும் இன்றும் இன்னோரன்ன அண்ணாவியராக இருந்து மற்றவர்களுக்கும் அதேபோன்று கற்றுக்கொடுத்து சிறப்பாக வாழ்ந்தவர். இவரது முதலாம் ஆண்டு நிறைவையெட்டி எம்மால் நடாத்தப்பட்ட நாடக விழாவில் வல்வெட்டி கருணாநாடக மன்றத்தினரால் தயாரிக்கப்பட்ட நாடகத்தில் அமரர் அவர்கள் பாத்திரமேற்று நடித்திருந்தார். அன்று தொடக்கம் அமரரும் குணம் அண்ணை ஆகிய இருவரும் என்னோடு நெருங்கிப்பழக ஆரம்பித்திருந்தனர்.

இப்படியாக ஏற்பட்ட நட்பின் காரணமாக தினந்தோறும் எங்கள் வீட்டிற்கு இரவுவேளைகளில் வருவார்கள். அப்பொழுது பலதரப்பட்ட விடயங்களை கதைப்போம். விஷேடமாக அரசியல் தூள் கிளப்பும்.இவர்கள் இடதுசாரிக் கொள்கைகளை உடையவர்கள். நானோ ஆரம்பத்தில் இடதுசாரிக்கொள்கை உடையவனாக இருந்தேன். பிற்காலத்தில் அக்கட்சியை வழிநடாத்தி சென்ற தலைவர்களின் பிற்போக்கு செயற்பாடுகள் என்னை வெகுவாக பாதித்ததனால் தமிழரசு கட்சி ஆதரவாளனாக இருந்து வந்ததினால் கொள்கை ரீதியாக முரண்பட்டு இரவு சுமார் 11 - 12 மணிவரை விவாதிப்போம். இருந்தபொழுதும் எமது நட்புக்கிடையே எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாத்துக்கொண்டோம்.

அமரர் அவர்கள் G.C.E O/L பரீட்சை எடுத்தபின்பு இடைப்பட்ட காலத்தில் கண்டிப்பகுதியிலிருந்து ஒரு சினிமா நிறுவனம் தாங்கள் எடுக்கும் திரைப்படத்தில் நடிப்பதற்கு நடிகர்களை தேர்வு செய்ய விண்ணப்பம் கோரியபொழுது அமரர் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டு பொலிஸ் இன்பெக்ரர் பாத்திரமேற்று நடித்து வந்தார். துரதிஸ்டவசமாக அத்திரைப்படம் இடை நிறுத்தப்பட்டது.பின்பு இவர் ஊருக்கு வந்து தச்சுவேலை செய்துவரும் சமயத்தில் பொழுதுபோக்காக நாடகங்களில் நடித்து வந்தார். இதன் காரணமாக என்னோடு தொடர்பு ஏற்பட்டது.

அமரர் அவர்கள் இலங்கை பொலிஸ் சேவையில் இணைவதற்காக நேர்முகப்பரீட்சைக்கு தோற்றி நிராகரிக்கப்பட்ட விடயத்தையும், இலங்கை போக்குவரத்துசபை பஸ் நடத்துனர் பதவிக்கு விண்ணப்பித்து அதிலும் நிராகரிக்கப்பட்ட கதையை மிகவும் நகைச்சுவையாக சொல்லி விழுந்து விழுந்து சிரிப்போம்.

திருமணவயது வந்தபொழுது விவாகப்பேச்சுக்கள் நடைபெற்றன.ஒரு நாள் அமரர் அவர்கள் என்னையும் நண்பர் சிவபாதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களையும் பெண்பார்க்க இமையாணன் பகுதிக்கு கூட்டிச்சென்றார். பெண்வீட்டாருக்கு எங்கள் இருவருக்கும் பெண்ணை பிடித்தால் தனக்கு சம்மதம் என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். எங்களுக்கோ அறுத்தால் இரத்தம் வராது என்று சொல்வார்களே அதேநிலைதான். நாங்கள் நேராத கடவுள் இல்லையென்று சொல்லலாம்.ஆனால் தெய்வாதினமாக செல்வி குமாரன் ஜானகிக்கும் மாணிக்கம் திருநாவுக்கரசு அவர்களுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு இனிதே நடைபெற்று முடிந்தது.

மணமகளின் பகுதியினர் பரம்பரையாக விவசாயத்தில் ஈடுபட்டதினால் இவரும் அத்தொழிலையே மேற்கொண்டார்.இவர்களது இல்வாழ்வின் நற்பேறின் பயனாக முத்தான நான்கு பிள்ளைச்செல்வங்களை பெற்றெடுத்து சீரும் சிறப்புமாக வளர்த்து சிறந்த கல்வியாளர்களாக்கினார். சமூகத்தின் மத்தியிலே நிலை நிறுத்தினார். மூத்தமகன் ஜனகனை யாழ்பல்கலைக்கழகத்தில் கலைபட்டதாரி கல்வியை இடைநிறுத்தி கொழும்பு பல்கலை கழகத்தில் சட்டப்படிப்பை மேற்கொள்ள வைத்து வெற்றியும் கண்டார்.இன்று பெயர் சொல்லுமளவிற்கு ஜனகன் சட்டதொழிலில் ஒளிவிட்டு பிரகாசிக்கின்றார். இவையெல்லாம் தந்தையார் வழியாக கடத்தப்பட்டதாகும்.

அமரர் அவர்களிடம் நான் அவதானித்த குணங்களில் மிகவும் அதிகமாகத் தோன்றுவது என்னவென்றால் நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டது போன்று யாருடனும் தர்க்கம் செய்து தான் சொல்வதே சரியென விவாதிப்பதனால் சிலரது வெறுப்புக்கு ஆளாகியதுண்டு. அமரர் அவர்கள் ஒரு இடைப்பட்ட காலத்தில் உடுப்பிட்டி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தில் கிளை முகாமையாளராகவும் கடமையாற்றி வந்தார். அக்காலப்பகுதியில் நடாத்தப்படும் விழாக்களில் நடாத்தப்படும் பட்டிமன்றத்தில் இவரும் ஒரு அணியில் நின்று விவாதித்து தனது கருத்துக்களை நிலைநிறுத்துவார்.

மேலும் தனது மூத்தமகள் காயத்திரியை ஆசிரியராக்கி மகிழ்வு கண்டார்.இரண்டாவது மகன் திலீபனையும் கல்வி கற்பித்து LIC நிறுவனத்தில் மேற்பார்வை அதிகாரியாக வேலைசெய்து தற்போது மலேசியாவில் இருந்து வருகிறார். இளையமகள் துவாரகாவையும் கல்வி கற்பித்தார்.மேலும் தனக்கு ஓய்வு கிடைக்கும் நேரத்தில் மண்டான் கிராமத்திலுள்ள ஏழைப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக அங்குள்ள ரியூட்டரியில் பிள்ளைகளுக்கு கல்விச்செல்வத்தை வழங்கினார். தொடர்ச்சியாக வேலைவாய்ப்பில்லாமையினால் கிடைக்கும் வருமானம் பற்றாக்குறையாகவே இருந்து வந்தது.தான் எப்படிக்கஸ்டப்பட்டாலும் தன் உறவினரிடம் உதவி கேட்பதில்லை என்ற விடாப்பிடியான கொள்கையில் உறுதியாக இருந்து வந்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது எப்படியிருந்தபொழுதும் தனது பிள்ளைகளை அவையத்தில் முந்தியிருக்கச்செய்த பெருமை இவருக்கு உண்டு.மேலும் இவரது வாழ்க்கையில் இவரது உடலில் நோய்கூட இடையிடையே தலைகாட்டித்தான் சென்றது.பிற்காலத்திலே இவருக்கு ஏற்பட்ட கொடிய நோயின் காரணமாக உடல் நலம் மிகவும் பாதிப்படைந்து 12-05-2014 திகதி இறைவனடி சேர்ந்தார்.அமரர் அவர்களுடைய இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டபொழுது எமது கடந்தகால நினைவுகள் ஒரு திரைப்படம் போல் நிழலாடுகின்றன. "இவையெல்லாம் எப்பவோ முடிந்தகதை "என்று யோகர்சுவாமி சொன்னதுபோல மனதைத் தேற்றிக்கொள்வோம்.

**டாக்டர்: க.வேலும்மயிலும்**
**"ஜீவனோதயம்"**
**கொற்றாவத்தை**

**நற்சிந்தனைத் துளிகள் சில...**

- அமைதியைத் தேடியடைவது மிகவும் கடினம் ஏனெனில் அது உங்களிடமே இருக்கிறது.
- ஒரு தரம் இறைவனை அனுபவம் செய்துவிட்டால் அதன் பின்னர் அவரைவிடச் சிறந்தவர் எவரையும் தேட வேண்டிய அவசியம் இருக்காது.
- அமைதி என்பது சத்தமில்லாமல் இருப்பது மட்டுமல்ல, மனம் சலனமற்று இருக்க வேண்டும்.
- எதையும் தடைக்கல்லாக நோக்காதீர்கள். எல்லாவற்றையும் வெற்றியின் படிக்கற்களாகப் பாருங்கள்.
- உங்கள் வழியில் ஒரு தடை வந்தால் அழுவதை நிறுத்தி முயற்சியை ஆரம்பியுங்கள்.
- உங்களை மதிப்பிடுவது உங்கள் செயல்களேயன்றி, நீங்கள் பேசும் மேன்மையான வார்த்தைகள் அல்ல.
- பெற்றோரின் நடத்தையே பிள்ளைகளின் கல்வி என்பது ஞாபகமிருக்கட்டும்.
- பொய்மையின் அடிப்படையிலான உறவுகள் சேற்றில் அத்திவாரம் இடப்பட்ட வீடுகளுக்கு ஒப்பாகும்.
- பணத்தை தானம் செய்வது புண்ணியம்தான். ஆனால் அதைவிட புண்ணிய ஆத்மாவாக இருப்பதே மேலானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு அண்ணரின் காலத்தின் நட்பின் பதிவுகள் சில!

**"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது"**

எனும் முதுமொழி சொற்றொடருக்கு அமைவாக இந்த பூமி ஒரு நாடக மேடை. இப்பூமியில் பிறந்தவர்கள் அனைவரும் நடிகர்கள். இதில் எல்லோருக்கும் எல்லாப்பாத்திரங்களுக்கும் பொருந்துவதில்லை. நாமத்தின் ஒளி அந்தவகையில் திருநாவுக்கரசு எனும் ஒளிக்கீற்றிருந்து சில பதிவுகள்.

ஒரு கூட்டுறவு ஊழியனாக குடும்ப வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டு இல்லற வாழ்வில் மனித பிறவியாக வாழ்ந்த இவர்

தன்னகத்தே தன் வாழ்க்கை அனுபவம் கல்வி போன்ற எண்ணக்கருக்களின் ஒரு கொள்கைப்பற்றாளனாக வெளிக்காட்டி அதனை கருத்துக்களாகவும், விவாத வமர்சனங்களாக தந்ததுடன் முன்வைத்து ஒரு மனிதசமூக நெருக்கீடுகளுக்கு குரல் கொடுத்து அதற்கு தீர்வாக பல முற்போக்கு சிந்தனைகளை கொண்டிருந்தாலும் எல்லாம் அவருடைய வாழ்வியல் காலத்தில் முற்றுப்பெறாவிட்டாலும் ஒருசில எச்சசொச்சங்கள் நினைவுபடுத்தியிருக்கின்றது.

இந்தவகையில் 1985ம் ஆண்டு காலப்பகுதியில் எமது கிராமத்தில் எம்போன்ற இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட எழுச்சி விழிப்புணர்வாக முன்னெடுக்கப்பட்டு ஒரு மாலைநேர இலவசசேவைக்கல்வி நிலையத்தை நிறுவி அதில் க.பொ.த உயர்தரம், கா.பொ.த சாதாரண தரம் கல்வி கற்ற இளைஞர் யுவதிகளால் கல்விச்சேவை வழங்கப்பட்டது.

இக்கல்வி நிலையத்தில் தன்னையும் ஒரு பாடஅலகு ஆசிரியராக இணைத்துக்கொண்டார். பொதுநலக்கொள்கை பற்றாளனாக வெளிப்படுத்தி அந்நிலையத்தின் கல்விச்சேவையை தொடர்வதற்கும் அது பூரணத்துவமாக ஒரு சமூகக்கூட்டமைப்புக்குள் சென்றடைந்து ஒரு கல்வி எழுச்சி ஏற்படவெண்டுமென்ற கொள்கையில் பெரிதும் அக்கறை காட்டி, அதன் வெளிப்பாடாக அதற்கு ஜனசக்தி (இலவசசேவை) கல்விநிலையம் என்ற பெயரை முதன்மைப்படுத்தி அது கல்விநிலையத்தின் பெயராக கொள்ளப்பட்டது. இன்னும் தன்னுடைய கொள்கை ஏற்புடையவர்களையும் கல்விசேவை வழங்குவதற்கு அறிமுகப்படுத்தி ஒரு பூரணத்துவமான கல்விச்சேவையை வழங்கக்கூடியதாயிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் வெளிப்பாடாக பல பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்கள் பெரிதும் பயனடைந்தனர். கல்வி நிலையம் அமைந்த சூழலுக்கு அயலிலிருந்து சிறிய கிராமங்களில் இருந்தும் வந்து கல்வி பயின்றனர். ஆரம்பப்பிரிவு முதல் க.பொ.த (சாதாரணம்) தரம் வரை கல்விச்சேவை தொடர்ந்தது.

இன்னும் இக்கல்விச்சேவையின் எதிர்காலத்தின் தேவையையும் அதன் வளர்ச்சிக்குரிய அரிய கருத்துக்களையும் தீர்மானங்களையும் வெளிப்படுத்தி எமக்கு ஒரு ஆலோசனைகளையும் வழங்கியதோடு தனது கடமை நிமித்தம் தன்னுடைய கூட்டுறவு கிளைமுகாமையாளர் கடமை நேரத்தை முடித்து மாலைநேரம் எமது கல்வி நிலையத்தின் நேரசூசிக்கு உட்பட்ட பாடஅலகுக்குட்பட்டு சேவையை வழங்கியது அவர் கொண்ட கொள்கையின் இலட்சியத்தை வெளிப்படுத்தியது.

கல்விச்சேவையை வழங்கும் ஏனைய ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும், மாணவர் பெற்றோர்களிடமும் அன்பாகவும் அடக்கமாகவும் பண்பாகவும் பழகி அவர்கள் அன்புக்கும் மரியாதைக்கும் உரியவராகவும் இருந்தார் இதனால் அவர் ஏனையவர்களிலும் பார்க்க வயதில் சிறிது முதிர்ச்சியுடையவர் என்ற முறையிலும் அவரின் நாமத்தை அவர் முன் வெளிப்படுத்தாமல் எல்லோரும் அண்ணா என்ற ஒரு மரியாதையுடன் அழைத்தனர். இது அவரின் உள்ளக்கிடக்கையில் இருந்த உண்மையான பண்பாகத்தென்பட்டது.

கல்விச்சேவை வழங்குவது மட்டுமன்றி எமது கிராமங்களில் நடைபெறும் சுக துக்கமான நிகழ்வுகளிலும் ஒரு அங்கமாக மாறி எல்லோர் மனதிலும் அழியாத நாமமாகப்பதிவாகியது. இக்கல்வி நிலையத்தின் நிர்வாக இயக்குனர் என்ற முறையில் மிக நெருக்கமாகி என்னுடன் கல்விச்செயற்பாடு விடயங்களில் நல்ல ஆலோசனைகளையும் வழங்கி அதன் மேம்பாட்டுக்கும் உறுதுணையாகவிருந்தார்.

இந்நிலையில் இன்னும் நெருக்கமான நட்பாக அவரின் அறிவு விலாசமாகி குடும்ப நட்பாக மாறியது.

தனது பிள்ளைகளின் கல்வி எதிர்காலம் பற்றிய கருத்துக்கள், பொருளாதார நெருக்கடிகள் தேவை பற்றி கருத்து பகிர்வுகளும் இறுதிவரை தொடர்ந்தது.

காலஅசைவுகளும் நாட்டின் அமைதியின்மையான காலவோட்டங்களும் பெரும் பொருளாதார சுமையை ஏற்படுத்திய தாக்கத்தை வெளிப்படுத்தியது. சிலநெருக்கடிகளுக்கு தீர்வு கண்டாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கீடுகள் தேவையின் நிமித்தம் தொடர்ந்தன.இந்நிலையில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாலும் வயோதிப நிலையும் குடிகொண்ட நோயும் இதற்கு தடையாகவே இருந்தது.தற்காலத்தேவைகளை செய்யமுடியவில்லை என்ற ஆதங்கமும் அவருக்கு பல்வேறு மனநெருக்கீடுகளாகின.

இருந்தும் தனது பிள்ளைகளின் கல்வி நிலையில் ஒரு குறிக்கோளாக இருந்து செவ்வன செய்தாலும் சில கட்டங்களில் இயலாமையின் வெளிப்பாடுகளும் தொடர்ந்தன.இருந்தும் உறவுகளும் சில நட்புகளும் சிறிது சீராகினாலும் பிள்ளைகளின் விடாமுயற்சியும் அவரின் வழித்தோன்றலும் மூத்த ஆண்மகன் உயர்நிலைக்கல்வியில் ஒரு சட்டத்தரணியாகவும் மூத்த பெண்பிள்ளை ஒரு ஆசிரியையாகவும் ஏனைய இரு பிள்ளைகளும் உயர்கல்வி வரை சென்றவர்களாகையினால்

**"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து**
**முந்தியிருப்பச் செயல்"**

என்ற திருவள்ளுவரின் இக்கூற்று ஒரு தந்தையின் கடமையை வெளிப்படுத்தியிருக்கின்றது. பிள்ளைகளின் வாழ்க்கைப்பின் புலத்தில் ஒரு காலத்தின் நெருக்கடி சுமைகளை ஏற்படுத்தினாலும் சிறிதுகால இடைவெளிகளை ஏற்படுத்தினாலும் எதிர்காலத்தின் துலங்கு நிலை ஓங்கும் அவரின் இலட்சிய கனவுகள் எஞ்சிய எச்சஞ்களால் நிறைவு பெறும்.

இப்படிப்பட்ட தூக்கலான பேச்சும் யதார்த்த கருத்துக்களாலும் உந்தப்பட்ட நட்புக்குரியவன் என்ற நிலையில் இவரின் மறைவு ஒருகணம் துன்பத்தின் சுமைகளை வரவழைத்து நின்றாலும்

என்றும் அவர் "திருநாவுக்கு அரசர் தான்"

**என்றும் நினைவுகலந்த நட்புடன்**
**என்.மகாலிங்கம்.**
**நொத்தாரிசு தோட்டம்,**
**கரணவாய்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணயம் எதிர்கொள்ளும் கோட்பாட்டுச் சவால்கள்

அடக்கு முறைக்குள்ளாகியுள்ள தேசிய இனங்களாக பொதுவாக அடையாளம் காணப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம், மலையகத்தமிழ் மக்கள் தேசிய இனங்களா என்றும் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கிறதா என்றும், சுயநிர்ணய உரிமையின் பிரயோகம் தொடர்பாகவும் நேரிடையாகவும், எதிரிடையாகவும் பல கருத்துக்கள் இருந்து வந்துள்ளன. அவை பற்றி புணையப்பட்டு கட்டவீழ்த்து விடயப்பட்டுள்ள கோட்பாடுகள் பல, தேசிய இனங்களின் குறிப்பாக தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு சவால்களாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

## தேசிய இனங்களா?

தேசிய இனப்பிரச்சினை என்று எதுவும் கிடையாது என்று சொல்லும் பேரினவாதிகள் இருப்பதுடன் அவர்களின் கருத்துடன் ஒத்துப்போகக்கூடியவாறு அதே கருத்தையே முன் வைக்கும் இடதுசாரிகள் எனப்படுபவர்களும் இருக்கிறார்கள். அதற்கு ஆதாரமாக இலங்கையே இன்னும் தேசமாக வளரவில்லையென்றும் அவ்வாறான நிலைமையில் தமிழ் மக்கள் எவ்வாறு தேசிய இனமாக முடியும் என்றும் வினவுகின்றனர்.

சிலர் சிங்கள மக்களை தேசிய இனமாக ஏற்றுக் கொள்கின்றனர். தமிழ் மக்களையோ, முஸ்லிம் மக்களையோ, மலையகத்தமிழ் மக்களையோ தேசிய இனமாக ஏற்கவில்லை. தமிழ் தலைமைகள் எனப்படுபவர்களில் அனேகர் சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் தேசிய இனங்களாக ஏற்றுக் கொண்டாலும் முஸ்லிம் மக்களையும் மலையகத் தமிழ் மக்களையும் தேசிய இனங்களாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலைப்பாடுகள் ஒரு மக்கள் கூட்டம் பொதுவான மொழி, பண்பாடு, ஆள்புலம், வரலாறு என்பவற்றை கொண்டிருப்பின் தேசிய இனமாகும் என்று ஸ்டாலின் கூறியதின் வரலாற்று வளர்ச்சியை புரிந்து கொள்ளாமை அல்லது ஏற்றுக்கொள்ளாமையின் விளைவுகளாகும். மேற்கூறிய தேசிய இனத்திற்கான நான்கு பண்புகளில் ஒன்றிரண்டு குறைந்திருப்பினும் ஒரு மக்கள் கூட்டம் தேசிய இனமாகும் தகுதியை கொண்டிருக்கும் என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு மொழியை பேசுபவர்கள் பல தேசிய இனங்களாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுவாக தேசிய இன ஒடுக்குமுறைக்கு உட்படும் மக்கள் கூட்டமொன்று தன்னை தேசிய இனமாக கருதி நிலைநிறுத்திக் கொள்ளும் உரிமையை கொண்டுள்ளது.**

இதனை மறுப்பவர்கள் பெருந்தேசிய வாதிகளாகவும், பேரினவாதிகளாகவும், அடையாளம் காணப்படுகின்றனர். இதனை மறுக்கும் இடதுசாரிகள் அல்லது சமவுடமைவாதிகள் எனப்படுவோர் சமூக தேசியவாதிகளாக அடையாளம் காணப்படுகின்றனர்.

## சாதிய தேசியம்

தேசிய இனமொன்றுக்குத்தான் தேசம் அல்லது தேசிய இனம் என்று கட்டமைப்பு இருக்க முடியுமெனில் சிலர் அடக்கப்படும் சாதிகளுக்கும் தேசம் - தேசிய - தேசிய இனக்கட்டமைப்பு இருப்பதாகவும், நாட்டுத் தேசியத்திற்குள் இனத்தேசியம் இருப்பது போன்று இனத்தேசியத்திற்குள் சாதியத்தேசியமும் இருப்பதாக கூறுகின்றனர். இது சாதி ஒடுக்குமுறை தகர்க்கப்படுவதற்கு பதிலாக தேசிய இன உரிமைக்குள் புகுந்து கொண்டு சாதியத்திற்கு தேசம் கட்ட எடுக்கப்படும். மலினமான குழப்பமான நிலைப்பாடாகும். இவ்வாறாயின் குலம், சமயம், பெண்கள் முதியோர், சிறுவர்கள், வித்தியாசமான திறனுடையோர், சமபால்நிலையில் இருப்போர், ஆண் பெண் பாலாரில் அடக்க முடியாதவர்கள் போன்றோருக்கும் தனித்தனி தேசம் கட்ட வேண்டிவரும்.

சாதிய தேசம் பற்றி குறிப்பிடுவோர் அக்கோரிக்கையை இரட்டை தேசியம் என்கின்றனர். இந்த தேசத்திற்குள் தேசம் இருப்பதாக சொல்பவர்கள் மாக்சும் ஏங்கல்சும் அயர்லாந்திற்கும், போலந்திற்கும் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை இருப்பதை வலியுறுத்திய காலக்கட்டத்திலும் அவர்களது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இது அடக்கப்படும் தேசிய இனத்தின் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை மறுக்கும் நிலைப்பாடாகும். பிரிந்துபோவதா இல்லையா என்பதை தீர்மானிப்பது அடக்குமுறை அரசின் அடக்கு முறைகளும், பிரிந்து செல்லக்கூடிய ஆள்புல வாய்ப்பும், தேவையும் ஆகுமேயன்றி சுயநிர்ணய உரிமை சய பிரிவினையும் அல்ல சுயநிர்ணய உரிமை சமன் பிரிவினையுமல்ல.

பொருளாதார சமத்துவம் பண்பாட்டுப்புரட்சி ஜனநாயகப்படுத்தல் போன்றவற்றினூடாக தீர்க்கப்பட வேண்டிய சாதிய அடக்குமுறையை (தற்போது சாதிய அடிப்படையில் உற்பத்தி உறவுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை) ஒழிப்பதற்கு பதிலாக, சாதிய ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்வதன் அடிப்படையில் சாதிய தேசியம் கட்டுவதற்கு விடப்படும் அழைப்பு தேசியங்கள் அல்லது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மலினப்படுத்தும் கோட்பாட்டுச் சிதைவாகும்.

## பிரிந்து செல்லும் உரிமையை மறுக்கும் சுயநிர்ணயம்

ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்பது ஒடுக்குகின்ற, தேசிய இனத்திலிருந்து ஒடுக்கப்படும் தேசிய இனம் தனியாக பிரிந்து சென்று தனியாட்சி அமைக்கும் உரிமையை கொண்டதாகும். இதில் பிரிந்து செல்லும் உரிமை என்பது அனைத்து தேசிய இனங்களினதும் உழைக்கும் வர்க்கத்தின் வல்லமையை சிதைக்கும், வகையிலோ சிறு சிறு அரசுகளை அமைக்கும் வகையிலோ ஏகாதிபத்தியத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டதாகவோ இருக்க கூடாது.

பிரிந்து செல்லும் உரிமை என்பது பிரிவினைவாதமல்ல சுயநிர்ணயம் என்பது ஒரு பக்கம் பிரிவினையையும் மறுபக்கம் ஐக்கியத்தையும் கொண்ட நதணயத்தின் இரண்டு பக்கங்களாகும். பிரிந்து செல்லும் உரிமை என்பது ஒடுக்குமுறை அரசிற்கு எதிராக போராடும் தேசிய இனங்களின் போராட்ட அடிப்படையாகும். அடக்குமுறை அரசில்லாவிடத்து பிரிந்து செல்லும் உரிமையின் நடைமுறைப் பிரயோகம் அவசியப்படாது. தேசிய இனங்களின் சுயேட்சையான ஒன்றிணைவு என்பது பிரிந்து செல்லும் உரிமை இருக்கின்றபோதுதான் அர்த்தமுள்ளதாகும். சோவியத் யூனியனில் மட்டுமே பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்பட்டிருந்தது என்றும் சீனாவில் பிரிந்து செல்லும் உரிமையை தவிர்ந்த நிலையிலேயே சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்பட்டது. சுயநிர்ணய உரிமை பிரயோகத்தின் புதிய வளர்ச்சி என்று கூறி சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து செல்லும் உரிமையை உள்ளடக்க வேண்டியதில்லை என்று சிலர் வாதிடுகின்றனர். இவர்கள் 1950 கள் வரை சீனாவில் சோவியத்யூனியனில் இருந்தவாறே பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்பட்டிருந்தது என்பதை அறியாமல் இருக்கிறார்கள்.

சோஷலிஸ சோவியத் யூனியன், சோஷலிஸ சீனா, சோஷலிஸ நிக்காரவோ என்பவற்றின் நிலைமை வேறு. இலங்கையின் நிலைமை வேறு, இலங்கையின் அரசு சோஷலிஸ அரசல்ல. புரட்சிக்கு மிகவும் அண்மித்த நிலைமையில் இருந்த காலகட்டத்திலிருந்த சோவியத் சீன நிலைமைகள் வேறு இலங்கையின் தற்போதைய நிலைமை வேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தொடர்ச்சியற்ற பல பிரதேசங்களில் அல்லது பூகோளரீதியாக சிதறி வாழும் மக்களுக்கு தனியரசு அமைப்பது கடினம் என்பது ஒரு புறமிருக்க ஏனைய சந்தர்ப்பங்களல் தேசிய இனங்கள் பிரிந்து செல்வதற்கான உரிமையை கொண்டிருக்க வேண்டும்.

அடக்குகின்ற அரசின் தேசிய இனத்தினர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதால் பிரிந்து செல்லும் உரிமையை உள்ளடக்கிய சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தக்கூடாது என்றும் மாறாக சுயாட்சியையே வேண்டுமெனவும் கூறுகின்றவர்கள் இருக்கின்றனர். இது இன்னொரு வகையான சமூக பெருந்தேசியவாத, சமூக பேரினவாத நிலைப்பாடாகும். இதனை அடக்கப்படுகின்ற தேசிய இனங்களின் மத்தியில் இருக்கும் மாக்சியர்கள் ஏற்றுக் கொள்ளும்போது அவர்கள் சமூக பெருந்தேசியத்திற்கான சமூக பேரினவாதத்திற்கான இயைபூக்கிகளாகின்றனர்.

பிரிந்து செல்லும் உரிமையின் பிரயோகம் என்பது வேறு. அதனை ஏற்றுக்கொள்வது, என்பது வேறு. அவ்வுரிமை ஏற்றுக்கொள்ளுபவர்கள் சுயநிர்ணய உரிமையை இன்னொரு வகையில் மறுப்பவர்களே.

## நடைமுறை சாத்தியமற்ற சுயநிர்ணய உரிமை

இனரீதியாக பிளவுபட்டிருக்கும் இலங்கை மக்களின் ஐக்கியத்திற்கு பாதகமாக அமைவதாலும், இலங்கையின் பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏற்றுக் கெள்ளமாட்டார்கள். என்பதாலும் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை மட்டுமல்ல சுயாட்சி, அதிகாரப்பங்கீடு போன்ற கோரிக்கைகளையும் கூட முன்வைக்கக் கூடாது. மாறாக தேசிய இனங்களிடையே சமத்துவம் என்பதையே முன்வைக்க வேண்டுமென்று சிலர் இன்று புதியவாதத்தை முன்வைக்கின்றனர். சோஷலிஸ அமைக்கப்பட்டபிறகு பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணயத்தை உறுதி செய்து கொள்ளலாம் என்றும் கூறுகின்றனர்.

அடக்கு முறைகள் அகோரமாகி, தேசிய இனங்கள் அழிவிற்குள்ளாகி கொண்டிருக்கும் போது தேசிய இனச் சமத்துவ கோரிக்கையை முன்வைப்பது என்பது அடிப்படையில் பெருந்தேசிய வாதத்திடமும், பேரினவாதத்திடமும் சரணடைவதாகும். இலங்கை நவகாலனித்துவ ஆட்சிக்குட்பட்ட முதலாளித்துவ நாடு. இந்நிலையில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது முதலாளித்துவ ஜனநாயக கோரிக்கையேயன்றி சோஷலிஷ கோரிக்கையல்ல. ஒரு தேசிய இனத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகள் சுயநிர்ணயம் சுயாட்சி, சமத்துவம் என்பவற்றின் அடிப்படையிலேயே உறுதிசெய்யப்பட முடியும். இதில் முதலிரண்டையும் கவ்வாத்து செய்துவிட்டு சோஷலிஷம் வரும்வரை காத்திருக்க சொல்லுவதும் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் தற்போது சம உரிமையை மட்டும் கோரியே போராட வேண்டும் என்று சொல்லுவதும் சுயநிர்ணய உரிமை கோட்பாட்டை நிராகரிப்பதாகும்.

## முடிவுரை

இங்கு அடக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணயம் எதிர்கொள்ளும் கோட்பாட்டு சவால்களில் சில மிகவும் சுருக்கமாக முன் வைக்கப்பட்டுள்ளன. எல்லா கோட்பாட்டு சவால்களையும் அறிந்து தொகுத்து விரிவாக ஆராய்ந்து எதிர்வினை புரிவது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்பவர்களின் கடமை ஆகும்.

இலங்கை வாழ் சிங்கள, தமிழ், முஸ்லிம் மலையகத்தமிழ் தேசிய இனங்கள் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுயேட்சையான, சகோதரத்துவத்துடன் பரஸ்பர நம்பிக்கையுடன் தேசிய இனங்களின் கூட்டிணைவாக இலங்கையை கட்டியெழுப்பும்போதே தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட முடியும்.

**- சட்டத்தரணி இ.தம்பையா**
**(எல்.எல்.பி)**

**நற்சிந்தனைத் துளிகள் சில...**

- பணத்தை தானம் செய்வது புண்ணியம்தான். ஆனால் அதைவிட புண்ணிய ஆத்மாவாக இருப்பதே மேலானது.
- உங்களுடைய நோக்கம் மேன்மையானதாக இருப்பின் நீங்கள் இயல்காகவே மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.
- ஒவ்வொருவருக்கும் அவரவர் நடிப்பதற்கென்று தனித்துவமான பாகம் உண்டு என்பதை நீங்கள் உணர்வீர்களாயின் சகிப்புத்தன்மை எளிதாக விருத்தியாகும்.
- நான் பெயர், புகழில் கர்வம் கொண்டால் நிந்தையும், அவதூறும் என்னை அழித்துவிடும்.
- மரியாதையைப் பெறும் ஒரே வழி அதனை முதலில் கொடுப்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயந்த காலமும்! வியந்த காலமும்!

கம்பு வரும் அடியும் விழும் கண்டிப்பால் மிகப்பயந்து
அம்பிடாத வேளையெலாம் அகமகிழ்ந்திருந்தவனை
தம்பியெங்கை என அப்பர் தருங்குரலில் மிகநடுங்கி
வெம்பிநின்ற காலமுண்டு வேந்தனென அவரிருந்தார்!

பள்ளிசெல்ல கூட்டிவரும் பருவத்திலே சைக்கிளிலே
மெல்லஎமைக் காவி வந்து விட்ட பின்னர் வேலை செல்லும்
உள்ளத்தினை கண்டு உவகையுடன் எந்தனப்பா
நல்லவரே என்றுணர்ந்து நாம் மகிழ்ந்த காலமுண்டு!

குண்டுக்கு காப்பாற்றி முட்டையிடும் வான் குருவிக்கும் காப்பாற்றி
வண்டுக்கு காப்பாற்றி கொட்டும் மழையினிற்கும் காப்பாற்றி
என்றைக்கும் இடம்பெயர்ந்து இருப்பவனைக் காப்பாற்றும்
தொண்டு செய்த தந்தையது துணிவுகண்டு வியந்திருந்தோம்

உற்ற நோயிருந்தும் ஒண்டுமில்லை ஒண்டுமில்லை என்று
கற்பவனின் வழி தடங்கல் காணாது அதைமறந்து
நிற்பவனே எந்தந்தை நித்திலமே இவ்வுலகில்
வெற்புயுரும் புகழ்படைத்து வியப்புடனே நினைக்கவைத்தான்

**- வாயுபுத்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளும் மனிதனும்!

லைற் எஞ்சின் பூட்டி
லவுட் ஸ்பீக்கர் தொங்க விட்டு
லட்சம் லட்சமாய் கொட்டி
டாம்பீகமாய் கொண்டாட்டமாம்

எட்டுத் திக்கிலிருந்தும்
எல்லையில்லா மக்கள்
அலைதிரண்டனர்
அழகான தம்பதியைக் கண்டுவிட

கடவுளின் கல்யாணத்தை
காணவந்த அடியவர்களின்
கைகளில் ஒவ்வொரு
வீடியோக் கமராக்கள்

போட்டோவுக்குப் போஸ் கொடுத்து
முருகனும் களைத்து விட்டார்
கல்யாணம் முடிந்ததும் அடியவர்கள்
கண்ணீர் மல்கினர் ஆனந்தமாய்

முண்டியடித்துக் கொண்டு
மக்கள் அனைவரும்
அழகான தம்பதியை
ஆசையுடன் தரிசித்தனர்

கடவுளை நேசித்த மனிதன்
காசைக் கொட்டினான் ஆலயத்தில்
மனிதனை நேசித்த மனிதன்
காசைக் கொட்டினான் ஆசிரமத்தில்

கடவுளை நேசித்தவன்
கடவுளால் வாழ்கின்றான்
மனிதனை நேசித்தவன்
கடவுளாய் வாழ்கின்றான்

**தி. காயத்திரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் பிறக்கும்

புரட்சி ஒன்றில்தான்
புனிதம் பிறக்கும்
அங்கேதான் மனிதமும் பிறக்கும்
என்ற கொள்கையை சிரமேற் கொண்டு
இலட்சிய விதையை
ஊன்றினாய் அன்று

விதை முளைக்கும் வேளை
உரம்போட மறந்தாய் - ஆனாலும்
விதை போட்ட உனக்கு
என்றுமே நன்றி
உன் விதையின் வீரியம்
இன்று மரமாய் மலர்ந்தது
நாளை விருட்சமாய் மாறும்
விருட்சங்கள் நாளை
பலருக்கு நிழலாகும் - அன்று
உன் இலட்சியமும்
உலகத்தில் ஈடேறும்

**தி.காயத்திரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தம்

வன்முறை வேண்டாம்
இரத்தவாடை வேண்டாம்
எப்போதும் நினைப்பதுண்டு
ஆனாலும் என்ன?
நொடிப் பொழுதில்!
இரத்தம் தெறிக்க
உடல் சிதற
கொலை விழுகிறது....
பாவம் நுளம்பு!

- மதுரன்

# ஓராயிரம் கரங்கள்

திசைகள்
எல்லாவற்றையும்
விழுங்கியபடி...
மேல் மண்டலத்தின்
திசைகள் ஒழுங்கு மாறிக்
கிடக்கிறது சூரியனும்
சந்திரனும் நட்சத்திர
சாட்சிகளின் முன்னே
வளம் மாறுகின்றன
என்றுமே இணைய
முடியாதபடி...

- யாத்ரிகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனப் பதிவுகள்


எழுபதுகளின் முன்பின்னாக
ஓர் மேதின நாள்.
முற்றவெளி மைதானம்
வடபிரதேச வாலிபர்சங்க
தோழர்கள்...........
சூழவே நின்றிருந்தனர்.
அமரராகிவிட்ட திருநாவுக்கரசு
என்முக அறிமுகமாகிய
முதல் நாள்.
நடுத்தர உயரம்
பக்க வகிடிட்டு வாரிய
தலைமுடி
அழகான பல்வரிசை
மிதமான பேச்சு.
தோழர்களோடு
மாக்ஸிசம் பற்றிய
காத்திரமான உரை முன்மொழிவு
என் கவனத்துக்குரியவையாகி
செவிமடுத்த
செய்திகளினூடு
ஏற்படுத்திக் கொண்ட அறிமுகம்
எமக்குரிய ஊரும் பெயரும்
முகம் காட்டிக் கொண்டன
தோழர் திருநாவுக்கரசுவின்
உரையாடல் நயம் பெற்று
திருநாமம் என்னும்
பின்னாளில் "நாமம்" என்றாகி
பெயரும் சுருங்கிக் கொண்டது
தோழர் திருநாமத்தின்
திருமணமும் நிச்சயிக்கப்பட்டு
எனது தொழில் நிலையம் சார்ந்த
உறவுக்குள் இணைக்கப்பட்டு
தோழமை உறவும்
இறுக்கம் கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமவர் கரத்தினில்
பற்பல நூல்கள்
முகமும் முதுகுமாக
சிவந்த நிற அட்டையுடன்
கண்ணில் பட்டவை
என் கரத்திலும் தவழ்ந்தன
"யதார்த்த வாதி வெகுஜன விரோதி
என்பது மாக்ஸிச கருத்து
தர்க்கிக்கும் ஆளுமையுள்ள
தோழரின் நட்பு
தொண்ணூறுகளின் பின்னாளில்
எனது நிறுவனம் இடமாற்றம்
கண்டிருந்தமை
அவர்முகம் காணுகின்ற
நாட்களும் மாதமாய் வருடங்களாயின.
கூட்டுறவு பணியாளனின்
பொருளீட்டல் வளம்குன்றி
முடமாகிய போதிலும்
பிள்ளைகளின் கல்விசார்
நிமிர்வு நிறைவு கண்டமையை
பொழுதொன்றில் ஒருமணி நேரம்
வாய்விட்டு பேசியிருந்தார்
அவருடலுக்கு...............
அஞ்சலியை செலுத்துகின்ற
வாய்ப்பிழந்த நான்
நான்கு தசாப்தங்களுக்கு மேலான
அறிமுக பகிர்தலை
தோழமை நெஞ்சோடு
என்னிதய சுவர்களில்
ஒட்டிக் கெண்ட பதிவுகளை
அவர்முக அறிமுகமாக
வெள்ளைத்தாளில்
சிலவரிகளை விதைத்துள்ளேன்.

**- தோழமையுடன் கே. ஆர். திருத்துவராஜா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் நன்றி

எங்கள் குடும்பத்தலைவரின் மறைவு கேட்டு உடன்வந்து அனுதாபங்களைத் தெரிவித்து உடனுதவி புரிந்தோர்க்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து நின்று உதவிய அனைவர்க்கும், தொலைபேசி வாயிலாக அனுதாபச் செய்தி கூறியவர்களுக்கும் மலர்வளையம் வைத்தவர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இங்ஙனம்
அன்னாரது குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு : கு. தம்பிராசா (சின்னவர்) குடும்பத்தினர்

Printed by : Appollo Printers - 077 199 4027 satha.lanka@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org